957

முத்தமிழ் க்ஷேத்திர

மதுரை

பாஸ்கரதாஸ் அவர்கள்

இயற்றிய

இந்து தேசாபிமானிகள்

செந்தமிழ்த்திலகம்

இரண்டாம் பாகம்

957
421

3- DEC 192

...சாமிக் கோன்,

... வடக்காவணிமூலவீதி,

...துரை,

...21. (As. 6

... மதுரை.

புலவர்கள் புகழப்பெற்ற முத்தமிழ்க்ஷேத்திர மதுர

பாஸ்கரதாஸரவர்களால் இயற்றப் பெற்ற

தேசாபிமானிகள் செந்தமிழ்த் திலகம்	விலை அணா	0—3—0
புதிய பெரிய பத்திரசக் கீர்த்தனங்கள்		0—5—0
ஷை 2-ம்பாகம் அநேக நூதனவர்ணமெட்டுகளடங்கியது		0—5—0
லலிதாங்கி சரித்ரம் நாகரிக வர்ணமெட்டுகளுடன்		0—8—0
வள்ளியம்மை சரித்ரம்	ஷை	0—8—0
அதிரூப அமராவதி	ஷை	0—6—0
சகுந்தலா சரித்ரம்	ஷை	0—6—0

மெஸ்மரிஸம், ஹிப்னடிஸம் என வழங்கும் வசிய சாஸ்திரம் சித்திரப்படங்களுடன் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. 1—8—0

தமிழ்நாடெங்கும் புகழ்பெற்றுள்ள மஹாவித்வான்,

ஸ்ரீமான், சங்கரதாஸ் சுவாமிகள்

மாணாக்கர்களிலொருவரான,

சந்தச்சரபம், ஷண்முகதாஸரவர்களியற்றிய,

பக்தி ஆனந்தக்கேலிப் பதங்கள்.

நண்பர்களே! கவனியுங்கள்! கவனியுங்கள்!! இது ஒரு புதுமுறையான தமாஷ்! தமாஷ்!! எல்லாம் தமாஷானபாடல்கள். இதுவே நீந்தாஸ்துதிக் கீர்த்தனங்கள். முத்தியை வேண்டிப் பக்தி புரிவார்க்கு முதன்மையான பாடல்கள். ஆலோல வள்ளி கோலாகலமாய் வேலவனோடு ஊசலாடுகையில் ஏசல் பாடுவது போல் காலநாகரிகத்திற்குச் சாலவும் பொருத்தமாய்ச் சிரித்துக் கொண்டு சிவன் விளையாட்டை விரித்துக் கூறும் விநோதப் பாடல்கள். "பக்கத்திருப்பவர் கெக்கெக்கென்று சிரிக்கச்செய் விகடக்கற்கண்டெனும்" விகடமே நிறைந்த விசித்திரப்பாடல் கள். சிந்தைக்கினிய செந்தமிழ்கமழும் சந்தப்பாடல்கள் நிறைந்த இப் பக்தி ஆனந்தக் கேலிப்பதங்கள் படிப்பாருள்ளம் பரவசமுறக் கவும், கேட்பாருள்ளம் கிளர்ச்சிமிகுக்கவும் ஒருங்கு திரட்டிப் புதிதாயச்சிட்டு வெளிவந்திருக்கின்றன. படிக்கப்படிக்கத் திகட்டாது திரும்பத்திருப்பப் படிப்பதன்றிக் கீழேவைக்க மனம் வராதென்பது திண்ணம்! திண்ணம்!! சொற்பக் காப்பிகளே தயாரில் இருக்கின்றன. விலை அணா 5.

காந்தி மஹான் முதலிய தேசாபிமானிகள் தியானம், மதுவிலக்கு, அன்னிய ஆடையை அறவே ஒழித்தல் விலை அணா 0 1

முகவுரை.

நமது முத்தமிழ்க்ஷேத்திர மதுர பாஸ்கரதாஸ் அவர்கள் இயற்றிய "இந்து தேசாபிமானிகள் செந்தமிழ்த்திலக" முதற் பாகத்தில் யாமெழுதிவிடுத்த முகவுரை ஒன்றையே அதனிரண்டாம் பாகத்தும் சேர்ப்பித்தது பெரும்பான்மை எமதவகாசமின்மை பற்றியேயாம். ஆயினும், இதை முற்றினும் படித்தறிந்த சில பண்டித சிகாமணிகள் நேரிலும், எழுத்து மூலமும் எம்மைக் கேட்டுவந்த பல கேள்விகளே ஈண்டித னிரண்டாம் பாகத்திற்கும் வேறு ஒரு தனி முகவுரை எழுதும்படி எம்மைத் தூண்டி விட்டன. ஆகவே முதன்முதல் அத்தகையார்க் கெமது நன்றி செலுத்திப்பின்னரவர் கேட்டுள பல கேள்விகளை மீண்டெடுத்துக் காட்டுதல் நந்தமிழபிவிர்த்திக்கு ஓரின்றியமையாமையென் றெண்ணுகிறேம். 'செந்தமிழ்த் திலகம் என்னும் தேசீயகீதநூல் நாடகத்தமிழானுக்கப்பெற்றுள பாக்க ளென்று சிறப்பாயுங் காட்டா நிற்பதற்கு விதி என்னை? என்றும், 'நூல் என்னும் ஒருமைப் பெயர் பாக்கள் என்று பன்மையாய் விரிவதற்குப் பிரமாணமென்னை? என்றும், வாக்கியம், கூற்று என்பன ஒருபொருட் சொற்களாகவே 'சொற்றொடர் வாக்கியம் எனக் கருதப்படுங் கூற்றேயாம்' என்பது கூறியதுகூறலெனும் குற்றத்தின்பாற் படும் என்றும், 'நச்சினார்க்கினியர் இசை நாடகத்தமிழை இகழ்ந்தது யாண்டு கொல்? என்றும், இசைத்தமிழும், நாடகத்தமிழும் என்ற பன்மை உய்ப்பித்து நின்றது என்றொருமையாயது குற்றந்தானே? என்றும், கவித்திர வழியில் என்ற சொற்றொடரில் திறம் என்பதற்காத் திரம் என்றெழுதியது வழுவின்பாற்படுமன்றோ? என்றும், முருகன்-பிரான் என்ற புணர்ச்சி முருகப்பிரான் என்று கெட்டுத் தோன்றிப் புணருமிடத்து, முருகபிரான் என்று கெடுதல் விகார மட்டினுமே

பெற்றது எவ்வாறோ? என்றும் சொற்சுவை பொருட்சுவையுடன் பொருந்தப் பெற்று பல நாடகக்கம்பெனியார் நடத்திக்காட்ட யாங் கண்கூடாக் கண்டுகளித்து ஒன்றினாலும் என்ற வாக்கியம் "முதலில் நான்குமீற்றில் மூன்றும் வினைமுதல் கொள்ளும்" என்ற சூத்திரப்படி பெற்று என்னும் வினை எச்சம் தன் வினைகொண்டு முடியாது பிறவினைகொண்டு முடிந்தது மருட்சிதானே? என்றும், ஆராய்ந்துழி என்ற சொற்றொடரில் நிலைமொழி யீற்றினுள்ள 'உ' என்னும் இறந்தகால வினையெச்ச விகுதி உழியென்னும் பெயரைத்தழுவி, எவ்வாறு எதிர்காலங் காட்டிற்று? என்றும் பரதம் ஒன்றே வேத்தியல் பொதுவியல் என்ற இருபிரிவினதாகுமன்றி நாடகத்தமிழ் அங்ஙன மாகமாட்டாவென்றும், சமய குரவர் நால்வருடன் இராமலிங்கசுவாமியையும் சேர்பித்து ஐவர் என்றது எவ்வாறு பொருந்திற்று? என்றும், அவ்வைப் பிராட்டியார் வாக்குக்கு இந்நூலாசிரியர் வாக்கை உபமானித்தது தமிழறிந்த பெரியார் தகையதன்றென்றும், "தொன்முறை யுரைப்பனவாகு பெயரே" என்ற சூத்திரப்படி பண்டைக்கால வழக்கச் சொற்களே ஆகுபெயரன்றி இற்றைய பாஸ்கரன் என்பது எவ்வாறு ஆகுபெயராயிற்று? என்றும் இன்னோரன்ன பிறவுமேயாம்.

இனி முறையே இக்கேள்விகளுக்கு யாமெடுத்துக் கூறிய விடைகளனைத்தையும் ஈண்டு குறிப்பிடுகின்றேமாக.

நாடகசாலையில் நடிக்கப் புகுந்த ஒருவனுக்கு இராக தாளஞ் செறிந்த பாவினங்களும், அவிநயங்களும் இன்றியமையா தாதலானும், அவிநயமின்றி இராகதாளம் எவ்வாற்றானு மியங்கா தாதலானும் இராகதாளஞ் செறிந்த எவ்வகைப்பாவினமும் அ[illegible] நடித்துக் காட்டினும், அல்லாது போயினும் நாடகத்தமிழின்பா[illegible] படுமென்ப. "பல்லவியோடநு பல்லவிசரணம் புல்லியவாறு புகலுங் கீர்த்தனம் அராகதாளமோ டவிநயந்தழீஇ நாடகத்தமி ழென நவிலினமுற்ற" என்னுஞ் சூத்திரமே இதற்குப் போதிய சான்றாமென்ப. ஆதலானே ஈண்டிதை 'நாடகத்தமி'ழென உரைத்தர்பாற்றென உணர்வேமாக. இனி நூல் என்னும் ஒருமைப் பெயர் பாக்களென்று பன்மையாய் விரிதற்குக் காரணமென்னை

யோ வெனில், மந்தை என்னும் அஃறிணை யியற்பெயர்ச்சொல் ஆடுமாடிவற்றின் கூட்டமெனப் பொருள்பெற்று, அவை கூடு கின்ற இடத்தைக்குறிக்குமாப்போல் நூல் என்னும் பால்பகா வஃறிணைப் பெயர்ச்சொல் கீர்த்தனம், விருத்தம் முதலிய பல வேறு பாக்க ளிவற்றின் கூட்டமெனப் பொருள்பெற்று, அவை எழுதப்பெற்றதானத்தைக் குறித்து நின்றமையான், ஈண் டொரு மையும் பன்மையும் ஒருங்கு பெற்றன வென்றுணர்வேமாக. நூலி லுள்ள பல விஷயங்களைப்படிக்கின்ற ஒருவன் நூல் படிக்கிறே னென்பானுதலா னிஃதாகு பெயரின்பாற்படும். "பால்பகா வஃ றிணைப் பெயர்கள்பாற் பொதுவன" வென்னுஞ் சூத்திரமே இதற்குப்போதிய சான்றுமென்ப.

இனிக் கூற்று என்பது சொல் என்று பொருள்படுவதொன் றேயன்றி, வரலாறு ஒழுங்கு நியமம் முதலிய பல பொருள்பட வும் வருமென்பதற்குக் "கொள்வோன் கோடற் கூற்றுமைந்தும்" என்னுஞ் சூத்திரமே போதியசான்றுமாகவே ஈண்டிஃது கூறியது கூறலெனுங் குற்றத்தின்பாற் படாவென் றுணர்வேமாக.

இனிச் சிந்தாமணியிலும், தொல்காப்பியப் பொருளதிகாரத் திலும், சிற்சிலவிடங்களில் வருகிற உரைநடையை நோக்க நச்சி னார்க்கினியர் இசைநாடகத் தமிழைப்பற்றி எழுதியுள்ளவை முற் றும் நன்கு புலப்படும்.

இனி, இசைத்தமிழும், நாடகத்தமிழும் என்ற பன்மை உய்ப் பித்து நின்றது என்றொருமையாய்து 'இரண்டும் ஒன்றுகூடி' என்று பொருள்படாது ஒவ்வொன்றும் 'தனித்தனியே உய்ப் பித்து நின்றது' என்னுஞ் சிறப்புப்பற்றியேயாம். இரண்டு கண் ணுஞ் சிவந்தது என்றாப்போல் இது பன்மையொருமையில் வந் தது. "ஒருமையிற் பன்மையும் பன்மையி னொருமையும்" என்ற சூத்திரமே இதற்குப் போதியசான்றுமென்ப.

இனிக் கவித்திரவழியில் என்ற சொற்றொடரில் உள்ள 'திரம்' என்னும் சொல் மரம், மறம் என்பன விருட்சம், வீரம் என்று பொருள் வேறுபடுவனபோலல்லாது திரம், திறம் என்பன

ஈண்டு வல்லமையெனப் பொருள்பெற்று, ஒருபொருட் சொற்களாய் வந்ததென்றுணர்வேமாக. பழம், பலம். தொடை, துடை. முறித்தல், முரித்தல். என்பன இதற்கு உதாரணமாமென்ப. இனி முருகன் - பிரான் என்றது முருகப்பிரான் என்று வருமொழி முதல் வல்லினங்கண்ட நிலைமொழியீற்று னகரமெய் கெட்டு, "இயல்பினும் விதியினும்" என்ற பொதுவிதிப்படி ஈற்றினின்ற உயிர்முன் வன்மை மிகுந்தும், முருகபிரான் என்று வன்மைமிகாதியல்பாயும் வருமெனக் கொள்வேமாக. நாதபிள்ளை, நாதப்பிள்ளை என்றும், குமரகோட்டம், குமரக்கோட்ட மென்றும் வருவனவே யீண்டிதற்குதாரணமாம். "சிலவிகாரமா முயர்திணை" என்னுஞ் சூத்திரமே இதற்குப் போதிய சான்று மென்ப. இனிப் பெற்று என்னும் வினை யெச்சம் களித்த என்னும் பிறவினையைத் தழுவிக் களித்த என்னும் சொல்லீற்றினுள்ள பெயரெச்சவிகுதி ஒன்று என்னும் பெயரைத்தழுவி, முற்றுப்பெற்றதென் றுணர்வேமாக. ஈண்டு தன்கர்த்தாவின் வினையைக்கொண்டு முடிதற்கேற்ற 'உ' என்னும் வினைஎச்சவிகுதி பிறகர்த்தாவின் வினையைக் கொண்டு முடிந்தமையான் இது முடிதற்கேற்ற வினையெச்சத்துத் திரிபெனக் கொள்ளல் வேண்டும். "சொல்திரியினும் பொருள் திரியாவினைக்குறை" என்னுஞ் சூத்திரம் இதற்குப் போதிய சான்றுமென்ப. பெய்து, கொள்வான் என்பன பெய்ய, கொள்ள எனத் திரிந்ததே இதற்குதாரணமாகும்.

இனி ஆராய்ந்துழி என்பதை ஆராய்ந்த - உழி எனப்பிரித்து 'அ' என்னும் நிலைமொழி யீற்றிறந்தகாலப் பெயரெச்சவிகுதி தொகுத்தவிடத்து வருமொழி புணர்ந்து "ஆராய்ந்த இடத்து" எனப் பொருள் பெற்றதென்றுணர்வேமாக. உற்றுழி, நேர்ந்துழி என்பன இதனுதாரணமாகும். "வலித்தல் மெலித்தல் - - - தொகுத்தல்" என்னுஞ் சூத்திரம் இதற்குச் சான்றுமென்ப.

இனி நாடகத்தமிழே வேத்தியல் பொதுவியல் என்ற விரு பிரிவினதாய தென்பதற்கு "வேத்தியல் பொதுவிய லென்றிரு திறத்தி னாட்டியநன்னூ னன்குகடைப்பிடித்து" என்பதே போதிய சான்றாகும்.

இனிச், சமயகுரவர் நால்வருடன் நாவலரவர்களைச்சேர்த்து, ஐவர் என்றூர் ஒருபாலார். அந்நால்வருடன் இராமலிங்க சுவாமிகளைச்சேர்த்து, ஐவர் என்றூர் பிறிதொரு பாலார். ஈண்டியா மெய்ப்பாலினுஞ்சேராது பத்திநிலையொன்றையே பகுத்துணர்ந்து, சுவாமியவர்களையுஞ் சேர்த்து ஐவரென்றேம். 'நீ சென்றபோது கலாசாலையில் யார் யார் இருந்தனர்?' என்ற கேள்வி பிறந்தால், 'தலைமையாசிரியரும், மாணவர்களும் இருந்தனர்" என்ற மறுமொழி பிறக்குமல்லவா? இதனல் ஆசிரியரும், மாணவரும் சமத்துவ நிலையுற்றனர் என்ற பொருள் பெறுமோ வென்பதை இதில் அபிப்பிராயபேதமுள்ளார் அறிந்து கொள்வாராக.

இனி, அவ்வையார் வாக்கென்னும் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் முதலியன, பலநூற்ருண்டிற்கு முன்னர் பிறந்து, பண்டைக்காலத்தரசாங்கத்தாரால் நீதிநூல் என்றேத்தப்பெற்று, இக்காலத்தும் அவை கலாசாலைப்பாடமென் றேற்படுத்தப் பெற்றமையான் உலகமெல்லாம் பரவி நின்றதென் றியம்பலாம். இந்நூலாசிரியர் வாக்கோ இற்றைக்கு நாலைந்தியாண்டிற்கு முன்னர்தான் பிறந்து, கலாசாலைப்பாடமென் றேற்கப்பெருமலே உலகமெல்லாம் பரவி நின்றதாகவே அதிவிரைவில் பரவுகின்ற ஓர் உன்னத சக்தியில் அவ்வாக்கினும் இவ்வாக்கு சிறிது சிறந்ததென்றுதான் சொல்லுதல்வேண்டும். ஒருவரைப்பற்றி வீணே புகழ்வதற்கும், ஒருவரைப்பற்றி வீணே இகழ்வதற்கும் இல்லாதனவற்றை யாமீண்டெடுத்துக்கூற வரவில்லை. அக்காலத்து எத்துணையோ இயற்றமிழ்ப்புலவர்கள் இருந்தும் கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, அவ்வைப்பிராட்டியார் முதலான சிலலோர்களே தம் இயற்றமிழ்ப்புலமையால் குலோத்துங்க சோழனவைக்களத்தை யலங்கரித்தாப்போல் இக்காலத்து எத்துணையோ இசைநாடகத்தமிழ்ப்புலவர்கள் இருந்தும் இந்நூலாசிரியர் ஒருவரே தம் இசைநாடகத் தமிழ்ப்புலமையால் நந்தமிழ்நாடு முழுமையும் அலங்கரித்தன ரென்றே யாம் மறுமுறையும் துணிந்து கூறுகின்றேமாக.

இனி, இவர்வாக்கு அவ்வாறு பரவி நிற்பினும், அது பாமரர் மாட்டேயன்றிப் பண்டிதர் மாட்டன்றே? என்றும் சில பெரியார் என்னை வினாவினர். இக்கேள்வியால் கற்றவர்களில் இராகதாள உணர்ச்சி பெற்றவர்களைப் பாமரரென்றும், இராகதாள உணர்ச்சி யற்றவர்களைப் பண்டிதரென்றும் இவர்கள் கருதியுளாரென்பது வெளிப்படை. இது இவர்கள் குற்றமன்று. நந்தமிழ் நாடே ஒரு காலம் அவ்வாறு கருதிவந்ததுண்டென முன்னரே கூறியுள்ளேம். ஒரு கிறிஸ்துவர் ஓர் இந்துவைப்பார்த்து, நீவிர் அஞ்ஞானிதானே? என்று வினாவினால், ஆம் என்று விடையளித்தலும் சிறிது காலத்திற்கு முன்னர் இருந்து வந்தது. அஞ்ஞானி என்பது இந்து மதத்திற் கொருபெயரென்று அவர்கள் மருண்டதுதான் அதற்குக்காரணம். அதுபோல் இசைஞான உணர்ச்சி 'காமத்தைவிளைவிக்குங்கருவியென்று' கற்றவரிற்சில்லார் மருண்டதே முன்னதின் காரணமாகுமென்றுணர்வேமாக. ஆகவே, இனியிது "பண்டிதர் மாட்டும் பரவத் தலையெடுத்துவிட்ட"தென் றகமகிழ்ச்சி யுறுகின்றேம்.

இனித் "தொன்முறையுரைப்பனவாகுபெயரே" என்ற சூத்திரத்திற்கு உரை எழுதினார் உரையினிடத்து ஆசிரியர் கருத்துக்கு முரண்பாடும், உதாரணவழியில் அவர் கருத்துக்கு உடன்பாடும் பெற்று, ஆசிரியர் தோன்முறை என்றதனால் பண்டைக்காலத்திருந்தனவன்றிப் புதிதுபுதிதாய்ச் சேருவன வாகுபெயராகாவென மறுத்துக்கூறி, உதாரணமாய் முந்தைக்காலத்திருந்த திருவள்ளுவரையும், பிந்திக்காலத்திருந்த பட்டினத்தடிகளையும், இந்தக்காலத்திருந்த தாயுமானவரையும் கூறிச்சென்றனர். ஆகுபெயரென்பது வினைத்தொகையாதலான் இது ஆனபெயர், ஆகின்றபெயர், ஆகும்பெயர் என விரியுமாகையானும், ஆசிரியர் தொன்மை எனாது தொன்முறை என்றாராகையானும் ஈண்டு முறைஎன்பது போல் எனப்பொருள்பெற்றுப் பண்டைக்காலப் பெயரினம்பற்றி இனிவருவனவும் ஆகுபெயராகுமெனக் கொள்வதே நூற்கருத்துக்கொப்பதென் றுணர்வேமாக.

இனி இந்நாடகத்தமிழின் தற்கால நிலைமையைப்பற்றி இன்னுஞ்சில முக்கிய விடயங்களை யீண்டெடுத்துக்கூறுதலு மாவசியகமாயிற்று. தமிழ்ப்பாஷை பிறந்த காலவரையைக் கணக்கிடுகிறபோது பற்பலர் பற்பலவாறு கூறினும், அது "உலகத்தோற்ற முதற்கொண்டே உண்டாயிருத்தல் வேண்டு" மென்றுறுதிப்பாடு பெறுதலே சிறப்புடைத்தென் றுணரக்கிடக்கும். தலைச்சங்கம் அழிந்தகாலம் முதலூழியினிறுதிக் காலமென அடியார்க்குநல்லாருரைத்தமையானும், அது துவாபரயுகத்தின் பிற்பகுதியாதலானும் இது ஊழிதோறும் தொடரப்பெற்று வருகிறதென்று மேலோர் கருதுகின்றனர். சங்கநூல்களினிடை யாராயப்புகின், இற்றைக்குப்பதினாறாயிரத்து நானூற்று நாற்பத்திற்றி யாண்டுக்கு முன்னர் தலைச்சங்க மிருந்ததாக ஒருவாற்றா னுறுதிப்பாடு கொள்ளலாம். இச்சங்கத்தகத்து முதன்முதல் தமிழ்மொழிக்கு இலக்கணநூல் வகுத்தவர் அகத்தியனாராவர். அவர்முறையே இயல் இசை நாடகமென்ற முத்தமிழ்ப்பாகுபாட்டிலக்கணமும் வகுத்தோதியுளாரெனச் சங்கநூல் பலவற்றினுள் இடை இடையே சில சூத்திரங்கள் காணப்படுகின்றன. அவைகளில் ஒரு சிறிதேனுமீண்டெடுத்துக்காட்ட விரியுமென் றஞ்சுகின்றேம். இங்ஙனமாக அவரது மாணவரில் தலைநின்ற ஆசிரியர் தொல்காப்பியனார் அகத்தியம் என்ற முதல்நூல்பற்றி அதன் வழிநூலாக இசைநாடகத்தமிழ் இலக்கணங்களை அறவே ஒழித்து, இயற்றமிழ் இலக்கணத்தை மட்டுமே வகுத்தோதினர். ஈண்டிதன் காரணமேதோ யாமறியேம்.

சுருங்கக்கூறின் நாளாவட்டத்திலே இசைநாடகத்தமிழ் சிதைவுபட்டதின்காரணம் இவர்தாமெனவுங் கிளத்தற்கூடும். இங்ஙனமாக ஆசிரியர் நச்சினார்க்கினியரைப்பற்றியும், பிறரைப் பற்றியும் பேசுவது அத்துணை ஆவசியகமற்றதாயிற்று. இவ்வாறவை யிரண்டும் ஆதரவற் றனாதையாயபோது, ஏதோ ஒரு நற்காலத்தால் சில்லோராலாக்கப்பெற்ற இசைநுணுக்கம், சாகித்தியதருப்பணம், சாகித்யரத்னாகரம், சப்தசுரமஞ்சரி, தசரூபகம் முதலிய இசைநூலிலக்கணமும், அதன் சார்பாய்ப் பிறந்த காயகா

வர்த்தனி, சங்கீதசுரபூஷணி முதலிய பிறவும் ஒருவாறு இசைத் தமிழை யாதரித்து, அது சங்கீத வித்வசிரோமணிகளின்பாற் சென்று, பலவகையானும் மேன்பாடுபெற்று நின்றது.

இனி நாடகத்தமிழின் நிலை என்னையோவெனில், அது புகுதற் கிடமற்று, தமிழ்ப்படித்தற்குரிய அவகாசமற்ற சாதாரண ஜனங் களிடத்திற் சிக்குண்டு, தடுமாறுகின்றது. கடைச்சங்கத்தினிறுதிக் காலந்தொட்டுப் புறக்கணிக்கப்பட்ட இத்தமிழ் இற்றைநாள்வரை "யானுமிருக்கிறே"னென்று சொல்லிக்கொள்ளுமாப்போல் அதை ஆதரித்துவந்த அன்னவருக்கு யாம் நன்றிசெலுத்தவும் கடமை பெற்றுளேம்.

இனியேனுமியற்றமிழ்ப்புலமைசான்ற வித்வசிரோமணிகள் "இது நாடகத்தமிழ்தானே" வென்றொதுக்காது, இயன்றவா றிதையாதரிக்க முன்வரவேண்டுமென்றும், முத்தமிழினும் முறை பட ஓதியுணர்வதே நந்தமிழ்ப்பாஷையின் அபிவிர்த்திக்கு ஓர் ஏற்புடைத்தாகுமென்றும் தமிழ் மக்கள் மாட்டியாம் வினயமாய் வேண்டிக் கொள்கின்றேம்.

வெண்பா.

தேச உணர்வுதரும் சீத்த வலிமைதரும்
பேசரிய செல்வப் பெருமைதரும்—கூசாத
ஊக்கந் தருமரிய ஒற்றுமையுண் டாக்குமிசை
மாக்கவியேம் பாஸ்கரனார் வாக்கு.

இங்ஙனம்,

நா. கிருஷ்ணசாமி நாயுடு,

தமிழபிமானி,

மதுரை.

உ

கடவுள் துணை

இந்து தேசாபிமானிகள்

செந்தமிழ்த்திலகம்.

இரண்டாம் பாகம்.

வெண்பா.

நந்தேய பாட்சிபெற நன்முயற்சி செய்துவரும்
இந்தியமே தாபிகண்மே லேற்றமிகு-செந்தமிழ்ப்பா
வேந்திமகா தேசியகி தப்பகர வென்றென்றும்
காந்திமகா செஞ்சரணம் காப்பு.

மகாத்மா காந்தி துதி.

1. அமாரநபி என்ற மெட்டில் பின் சந்த முடுகு

இராகப்-செஞ்சுருட்டி. தாளம்-ஆதி.

பல்லவி.

காந்திமஹான் - திவ்ய
காட்சிப்ரமாணத்தெய்வம்-காந்திமஹான் திவ்ய (கா)

அநுபல்லவி.

காந்தி மஹான் சாத்மீகச் சாந்தி மஹான் ப்ரத்யட்சக் (கா)

சரணம்.

ஆட்சேபனை எதற்கே அறிந்துகொண் டோமிதற்கே
அத்தாட்சிபலசத்யாக்கிரகமே எத்தாலும்பிரசித்யாக்கிரகமே(கா)
ஒத்துழையாமை என்னும் உயர்ந்தநிலையி லின்னும்
ஊக்கம்பற்றிடஎக்கம்முற்றிடும் சோக்கம்பற்றிடஆக்கம்முற்றிடும்
பாண்டி மதுரப்பூமி பக்த பாஸ்கரசாமி
வாமாலைப்படியோமிதுமுத லேமாறுமலேயாமாறுழுகுவம் (கா)

பியார்மோகனியா என்ற மெட்டு.

2. இராகம்-தேசிகம். தாளம்-ஆதி.

பல்லவி.

மகாத்மா காந்தி-சொல்-மாறுதவெற்றியேந்தி (மகாத்மா)

அநுபல்லவி.

சுகாத்ம சாந்தி-பெறத்-தான் பலதுக்கம் நீந்தி (மகாத்மா)

சரணம்.

சுகாஸ்பத நயமே
சுபச்சுய ராட்சியமே
முகாமையிற் செயமே
முற்றிலும் நிச்சயமே (மகாத்மா)

தோஹறா.

ஜீவகாருண்யமே தேகமாவந்ததோர்
தெய்வீகப்புருஷதீரன்
சோகப் பாரதச் சேயரைக் கரையேற்றும்
சித்தஸ்வராஜ்ய வீரன்.

அநுபல்லவி யெடுப்பு.

திருமதுர பாஸ்கர-சீலன் பாமாலை சூடும் (மகாத்மா)

நவசக்தி பத்ராதிபர் ஸ்ரீமான் திரு. வி, கல்யாணசுந்தர முதலியார்.

3. நன்னபியாராரே என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்பியாக். தாளம்-சாப்பு.

பல்லவி.

திரு. வி. கல்யாண　　சுந்தரன்
தேர்நவ சக்தி　　யந்திரன்　　(திரு)

அநுபல்லவி.

அருமைத்தேசிய　　பக்தன்
அனைவர்க்குமே　　ப்ரசித்தன்
பெருமை பெறுஞ்　　சமர்த்தன்
பேசும் தேச பாஷை　　வாசத்தன்　　(திரு)

தொகையறா.

"மாற்றானுக்கிடங்கொடேல்"　என்றநன்மந்திரம்
　　மதிக்கவே விளக்கு மன்பன்
வேற்றானை மாற்றியே　　சுயராஜ்யஸ்தாபனம்
　　விரைந்து செய்கின்ற தென்பன்

ஷை அநுபல்லவித் தொடர்.

அன்னிய சம்மந்த　　மில்லான்
ஆரிய சித்தாந்த　　நல்லான்
முன்னுயர் தாயின்　　சொல்லான்
மூட நாடர் கூடவே　　நில்லான்　　(திரு)

தொகையறா.

"ஊக்கமதுகைவிடா"த்　தீர்க்கமிகு மெய்யினால்
　　உலகவலஞ்　　செய்யுதாரன்
"ஊமையனும்வாய்திறந்　தின்றேசுதந்தரமென்
　　றுரைக்கப்போ　　திக்குந்தீரன்

ஷை அநுபல்லவித் தொடர்.

உன்னதமஹாத்மா காந்தி
ஒத்துழையா விரத மேந்தி
சன்னத பாஸ்கர சாந்தி
த்யாக யூக சாகரம் நீந்தி (இரு)

ஸ்ரீமான். சத்தியமூர்த்தி ஐயர்.

4. வெள்ளிமலை யோத்தபல மேடை என்ற மெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி. தாளம்-ஆதி.

கண்ணிகள்.

இந்தியச்சீமான் சத்தியமூர்த்தி-உல
கெங்கும்பிர சங்கஞ் செய்யுங்கீர்த்தி-தன்னை
எத்தனைதரஞ் சொன்னாலும்
தித்திக்குஞ் செவிக்கமுதச்
சீர்த்தி-தரும் நேர்த்தி. (இந்தி)

வந்தேமாதர மந்திரமுழக்கம்-குரு
மாமுனி காந்தி யின்புறுபழக்கம் உண்மை
வஸ்துவைக் குறித்துரைத்த
ஒத்துழையாத் தத்துவத்தை
வழக்கம்-பண்ணும்-விளக்கம். (வந்தே)

வர்த்தகங்கைத் தொழில் விர்த்தி பெறவே-பிற
வச்சத்தார் சரக்கை யொழித்தறவே-இந்து
மக்கள்மூ ஸல் மான்பிரியாச்
சற்குணச் சகோதரத்தை
யுறவே- செய்தான்- நிறைவே (வர்த்)

முத்தமிழ்ச்　　சங்கமதுரப் பூமி-புகழ்
முப்பொழுதுஞ் செப்புசுகக்ஷேமி-நல்ல
முக்கனிதேன் சர்க்கரைக்கும்
மிக்கருசிக்கும்　　பாஸ்கர
சாமி-சொல்லின்-　　நேமி.　　(இந்திய)

திரிசிரபுரம்

வைத்தியசிம்மான் ராஜன்.

5. நக்கடாகோனி ஜாவுடாவுடோலே என்ற மெட்டு.

இராகம்-தேசிகபியாக். தாளம்-ஏகம்.

பல்லவி.

தேசநேசன்　　தித்திக்குமுபந்பாசன்
திரிசைவாச　　ராஜனே　　(தேச)

அநுபல்லவி.

தாசர்க்குத்தாச　　விஸ்வாசன்
சத்யாக்கிரக　　நற்போஜனே—நல்ல
ஒத்துழையாத　　சமாஜனே　　(தேச)

தொஹைறா.

காந்தி　　சிஷனே
கார்யமீடேற்றும் ரோஷனே

சரணம்.

கண்ய சுராஜ்ய　　ப்ரகாசனே—ஞானப்
புண்ய பாஸ்கர　　விலாசனே　　(தேச)

ஸ்ரீமான். சுப்பிரமணியசிவம்.

6. துனியாபர்மே அர்கர்யாரோ என்ற மெட்டு.

இராகம்-தேசிகசுருட்டி. தாளம்-ஆதி.

பல்லவி.

துணிவாய்ப் பேசுந் தேசத்தொண்டன்
சுப்பிரமணிய சிவம்
சுயராஜ்யம் வாங்கச் செய்தான்
சோபி தத்தவம் (துணி)

அநுபல்லவி.

தூயனே—நம்ச—காயனே
தோதாய் வந்தே மாதரத்தைச்
சொல்லுவான்—துயர்
வெல்லுவான்—எங்கும் செல்லுவான் (துணி)

சரணம்.

நமதுதேச நன்மைக்காக ஞாயங்கூறினன்
ராஜவிருந் தில்லச்சிறை வாசமேறினன்
ஞயம்படவிளம்புகாந்தி நாதன்சக்திநாடினல்
நவில்மதுர பாஸ்கரன் கவிமுழங்கிப்பாடினல்
நயமே —ஜெயமே
நமக்கில்லே—பயமே (துணி)

தூத்துக்குடி ஸ்ரீமான்.

வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள்.

7. அமுதமுதேகோ என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்பியாக். தாளம்-ஆதி.

பல்லவி.

சிதம்பரச் சிமானதி தீரச்சுதேசி (சிதம்)

அநுபல்லவி.

தீரச்சுதேசி-சுத்த வீரப்ரகாசி (சிதம்)

சரணம்.

சிதம்பரவ நெல்லையில்
இந்துநிலை சொல்லையில்
இறந்தவர்க்கு முணர்ச்சி
ஏற்பட்டதவ் வெல்லையில் (சிதம்)

புறநாட்டுச் சரக்கெல்லாம்
புறக்கணித்திட்ட நல்லான்
பூர்வசுய ராஜ்ஜியப்
போரில்முன் நிற்கவல்லான் (சிதம்)

அடிமைத்தனத்தைப் போக்கி
ஆண்மைத்தன முண்டாக்கி
ஆதிமத சக்தியின்
நீதியருளும் வாக்கி (சிதம்)

மாமுனி காந்தி சீடன்
மந்த்ரசுதந்த்ர நாடன்
மதுரபாஸ்கரன் ஜெய
மார்க்கவைராக்ய க்ரீடன் (சிதம்)

அலகபாத் இண்டிபெண்டண்ட் பத்திராதிபர்

ஸ்ரீமான். ஜியார்ஜ்ஜோஸப்.

௮. துமேசர்தார் என்ற மெட்டு.

இராகம்-தேசிகபியாக். தாளம்-ஆதி.

பல்லவி.

ஜியார்ஜ் ஜோஸப் சுதேசியே-மதுரைச்
செல்வ நேசியே- (ஜியா)

அநுபல்லவி.

சுய ஆட்சி வாங்கப் பேசியே-போதிக்கும்
சுயப்ர காசியே (ஜியா)

சரணம்.

ஜயஞ்செய்காந்தியின் சீடன்-பாரத
நாட்டுப் பொற்கிரீடன்
ஜெயமே தங்குமார்ப்பாடன்-நல்லோரின்
சிந்தைக்கொரு பீடன் (ஜியா)

உயர்ந்த கல்வியின் பாக்யன்-உண்மையாய்
உழைத்திடுஞ் சிலாக்யன்
ஒத்துழையாமையின் யோக்யன்-பாஸ்கரன்
உறுதி கொள்வாக்யன் (ஜியா)

ஸ்ரீமான் வரகவி
சுப்ரமண்யபாரதியார்.

9. கோலாகல லீலையின்பமே என்ற மெட்டு.

இராகம்-தந்யாசி. தாளம்-ரூபகம்.

பல்லவி.

மாலோன் சுப்ரமண்ய பாரதியே
வரகவிச் சந்ததியே (மா)

அநுபல்லவி.

மேலோங்கு தேசீய
விர்த்தியிலுத்தம சத்திய (மா)

சரணம்.

காலமெல்லாம் பாதகாடு கதிபெற்றோங்கக் கனியிற்பாடு
சீலானுகூலஞ் செப்பிடு கற்பகமொப்பிடு (மா)

புண்யநாகபுரித்தீர்மானம் பூமியெங்கும்புகட்டும்ஞானம்
கண்யபாஸ்கர காவிய மேவிய ஜீவிய (மா)

மகரிஷி அரவிந்தகோஷ்.

10. மரகதசித்ரமயூரவாகா என்ற மெட்டு.

இராகம்-தேசிகதோடி. தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மகரிஷி யரவிந்த கோஸ்சுதேசி
மனுமுறை நெறிவில காதநேசி
மதிப்பவ ரிருதய முதிப்பவ ரெனப்பலர்

துதிப்பவர் பரத தெய்வீகவாசி
மாட்சிமை கடாட்ச மோங்கு
காட்சியின் சுயாட்சிவாங்கு

மந்திரமே சந்தரும்
தந்தருள வந்தகுரு (மக)

சுகமுறவழிசொலுந் தூயமூர்த்தி
சுபகரமொழிசம்ப்ரதாயகீர்த்தி

சுருதிகள் முழுவதும் கருதியன் பொருசிட
உறுதியாய்ப்பழகு சகாயசீர்த்தி
தோய்ந்தநல்ல காந்திசொல்லே

எந்திச்சொல்லுஞ் சாந்திவல்ல
சோதரனே பாஸ்கரனின்
வேதவந்தே மாதரனே (மக)

ஸ்ரீமான் பண்டித

ராம்போஜதத்தர்.

11. பங்காயிலாலே என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான் பியாக் தாளம்-ஆதி.

பல்லவி.

பண்டிதராம் போஜதத்தர்-பரிசுத்தர் எம் (பண்)

அநுபல்லவி.

எண்டிசைபுகழ்தேச இந்தியரின்ப்ரகாசத்
தொண்டுசெய்திடுஞ் சுதேச - சோபிதவாச (பண்)

பெருமைச்சுயராஜ்ஜியம் பெருகத்தகுந்தநயத்
தருயப்போராட்டத்தில் ஜெப-சாலியாகிய (பண்)

மாமுனி காந்திவேத மந்திர மாஞ்சுபோத
நேமவிரதநன்னீத - நிற்கும்ப்ரமாத (பண்)

கோமகன்குலநேமி கூடல்பாஸ்கரசாமி
தேமிகும்பாரதப்பூமி - ஜீவியக்ஷேமி (பண்)

ஸ்ரீமான்கள் சத்தியபால்கிச்சலு.

12 அடுக்குமல்லிகை என்ற மெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி. தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

பாஞ்சால சத்திய பாலன் கிச்சலுவே
இந்துமுஸ்லீம்சள்
பாதுகாப்பெனுஞ் சோதரவலுவே-இந்தப்
பாரதப்புவி யோரிதம்பெறு
வீரசம்ப்ரம தீரத்தென்புது (பா)

தோஹைரு விருத்தம்.

உடல்பொருளாவி மூன்றும் உத்தமத்தேசத்துக்கே
திடமுட னளிக்க நல்ல சித்தத்தி லுயர்தெய் வீகக்
கடமையைப் படித்தசீலர் காந்தியொத்துழையாஞானத்
தடமதில் விலகிடாத தன்மைசேர் வன்மையாரே

கண்ணித்தோடர்.

சாந்தமகத்துவஞ் சார்பஞ்சாப்பிலே-நல்லார்கள்கூடுஞ்
சபையாஞ் சாலியன் வாலாத்தோப்பிலே-படு
சண்டாள டையரா லுண்டான கொலையை
மன்றுடிக் காத்திடத் திண்டோள் கொடுத்திட்ட (பா)

தோஹைறு விருத்தம்.

முன்னொருநாள் சுயராஜ்ஜியம் வாங்காமற் கூந்தலள்ளி
முடியேனென்று
நன்னயமாய்ச் சபதமிட்ட பாஞ்சாலி பிறந்தகற்பு
நாட்டில்தோன்றிச்
சொன்னயமும் பொருணயமும் சுகவாழ்வுக்
குறுநயமுந் துலங்கப்பேசு
மன்னர்புக ழிரண்டுகவ மணியான தேசபக்தர்
வாழ்க மாதோ

கண்ணித்தோடர்.

பரதமக்களின் செயல்தெரிந்திடவே
எல்லோருங்கூடிப்
பாரில்தியாக மேபுரிந்திடவே-எதிர்
பார்க்குந்தொண்டரை காக்குந்தண்டமிழ்ப்
பாஸ்கரன்திரு வாக்கியங்கமழ் (பாஞ்)

அகில் இந்தியா முஸ்லீம் கிலாபத் அதிபதி ஸ்ரீமான்-அன்சாரி.

13. சூரகுலசம்மாரா என்ற மெட்டு.
இராகம்-செஞ்சுருட்டி. தாளம்-ஆதி.

பல்லவி.

மாமதிமிகுமன் சாரி—முஸல்
மான்கள் சபைக்கதிகாரி (மா)

அநுபல்லவி.

மனமே தினமே-தேரி (மா)

சரணம்.

மகிதல நலமுற வருரூப காரி
மதிப்போங் துதிப்போங் கோரி (மா)
அகில் இந்தியசுய ராஜ்ஜியநிதியே
அளிப்போங் களிப்போந்ததியே (மா)
சுயநலங் கருதிடாத் துணிவுள தீரன்
சொல்வோம் வெல்வோம் வீரன் (மா)
சுகிர்த்பாஸ்கரன்தமிழ்ச்சூடுஞ்சுதேசி
தொழுவோம் எழுவோம் பேசி (மா)

ஸ்ரீமான். வி. எப். ஆண்ட்ரூஸ்.

114. அம்மாமதுரை மீனாட்சி என்ற மெட்டு.

இராகம்-இந்தஸ்தான்தோடி. தாளம்-ஆதி.

கண்ணிகள்.

வி. எப். ஆண்ட்ரூஸ் ஆகியசுதேசி—நமக்
காகவுழைக்கும் நேசி— உண்மையை
அறிவிப்பார் நிதம் பேசி
அதிகவிசுவாசி
அதிகவிசுவாசி வி. எப். (ஆண்)

வேண்டும்இந்தியபி மானி—பக்தி
விளையும் பசும்பொன் மேனி-சத்திய
விரதக் கிரகஞானி
விலகிடா நிதானி
விலகிடா நிதானி வி. எப். (ஆண்)

யோகிகாந்தியருள் வேதம்- தன்னை
யொப்புக் கொண்டு நீதப்—அதனையுப
யோகப்படுத்து வீதம்
உரைத்தனர்சுபோதம்
உரைத்தனர்சுபோதம் வி. எப். (ஆண்)

தியாகவாழ்பரத நாடு— மெச்சுந்
தீர்தம்மைத் தேடு—பாஸ்கரன்
திவ்ய கீதம் பாடு
ஜெயமுரசு போடு
ஜெயமுரசு போடு வி. எப். (ஆண்)

பம்பாய் கிரானிக்கல் பத்திராதிபர்

ஸ்ரீமான். பி. ஜி. ஹார்னிமன்.

15. நானுன்னுசையாலே என்ற மெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி. தாளம்-ஆதி.

பல்லவி.

கனம்-ஹார்னிமன் உபதேசம்-சுய
அரசாம் பிரகாசம் (கனம்)

அநுபல்லவி.

எனின்னுந் தாமதம் விடுவோம்-காந்தி
இயக்கமதனைக் கும்பிடுவோம்- அந்த
ஞானசாத்மீகயுத்தந் தொடுவோம்-அதில்
ஞாயப்பலவுமடைந் திடுவோம் (ஹார்)

தொகையறு.

பக்திசேர் பம்பாய் கிரானிக்கல் பத்ராதிபனே
பரத நாட்டுக் குண்மையே பகர்பிர தாபனே

பாட்டு சரணம்.

பாமிகு ம்ாமது ராபுரி பாஸ்கர
சாமிச கோதர மேபெற வோதிய (ஹார்)

டில்லியெனும் அஸ்தினபுரம்

ஸ்ரீமான் ஹக்கீம் அஜ்மல்கான்.

16. யாபஞ்சதன் பஜானு என்ற மெட்டு.

இராகம்-அமீர்கல்யாணி. தாளம்-ஆதி.

பல்லவி.

அன்பன் ஹக்கீம் அஜ்மல்கான்
அஞ்சாக் கிலாபத்தார்க்கு மகான் (அன்)

அநுபல்லவி.

பொன்பூமியஸ்தி னபுரத்தான்
பூர்வீகசாதனத் தரத்தான்
தென்பான பாரதவரத்தான்
தேசிய நேயதூய நற்றிரத்தான் (அன்)

இந்துமுஸ்லீம்க ளொன்றாய்
எந்நாளும் வாழநன்றாய்
வந்துநிற்கவுங் குன்றா
வள்ளல் செய்நன்மை விள்ளுவதொன்று (அன்)

சந்தமதாய் பூமி
சாற்றுப்பாஸ்கர சாமி
வந்தேமாதாச் சேமி
மாதாசுதேச மைந்தநன்னேமி (அன்)

இந்தியத் தபால் மஹால்ஸ்தாபகர் ஸ்ரீமான் ஜோசப் பாப்டிஸ்டா.

51. தூங்காமை வாரி என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்-ஏகம்.

பல்லவி.

நல்லசீமான்ஜோசப் பாப்டிஸ்டாசிறந்தானே
இந்து-தேசாபிமான மிக நிறைந்தானே (நல்)

அநுபல்லவி.

ஜயசிங்கம் தபால் முத்திரைச்சங்கம்
ஸ்தாபித்த சொக்கத்தங்கம்-நம்
சாசனச்சுதேசவிசு வாசத்தின் அங்கம் (நல்)

தொகையறு.

தானந்தவம்பொறுமை ஞானம்பெறும்பெருமை
சார்ந்த கல்விப்பிரசாரன்
மோனந்தரும்மஹான் காந்திஒத்துழையாத
முயற்சிமே லோங்குதீரன்

அநுபல்லவி எடுப்பு.

பிர-சண்டமாருதக்கவி - கொண்ட
பாஸ்கரசாமி விண்ட-நற்
பிரபலவிரதமெய்வரதத்தொண்டன் (நல்)

தேசீயநாட்டின் செல்வக் கொடையாளி புனா-கண்ணுவதாரச் சீமான் பொம்மான்ஜி.

52. சித்தம் சேபாஜி என்ற மெட்டு.

கண்ணிகள்

பொம்மான்ஜி தன்ம சம்பன்னன்-புனாவின்
பூர்வகொடைக் கன்னன் (பொம்)

பெம்மான் சுதேசிநிதிமன்னன்-கோடிபொன்
பெறத் தந்தனர்முன்னம் (பொம்)

தோஹறா.

தாய்பாஷைபானதோர் பாரதக்கல்வியைத்
தரணிமேற் பகருதாரன்
சாத்மீகபுத்தஒத் துழையாத விரதமே
தழைக்கநின் றுழைக்கும் வீரன்

டி கண்ணித்தொடர்.

சத்தியம் தவறிடாத நேசன்- உண்மையாய்ச்
சாதிக்கும் பாசன்- (சத்திய)

நித்திய மங்கள கோஷன்- தத்தவம்
நீடிக்கும் ரோஷன் (பொம்)

தோஹறா.

மாதம் பத்தாயிரம் பொன் தந்துதேசீய
மகத்துவ முயர்த்து மன்பன்
மாறுத சுயராஜ்ய வாழ்வுபெற் றுலகமே
மனமாற வாழ்த்து தென்பன்

ஷை கண்ணித்தொடர்.

மதுரமா முத்தமிழ்ப் போதம்-எந்நாளும்
வழங்கு நன்னீதம்- (மதுர)
துதிசெயும் பாஸ்கர கீதம்-நீங்காத
சோபித நாதம் (போம்)

ஆரியசமாஜ ஸ்தாபகமஹான்

ஸ்ரீதயானந்த சரஸ்வதி.

53. வேலவா யென்னை யாளாயித் தருணமே என்ற மெட்டு.

இராகம்-தேசிகம். தாளம்-ஆதி.

பல்லவி.

சாதுஞான தயானந்த சரஸ்வதி (சா)

அநுபல்லவி.

ஓதுமாரியக்கல்வி யுலகில்பரவநல்கிப்
பாதுகாத்திடும் நல்ல பாங்குள்ளோன்புகழ்
தாங்கும்ப்ரதாபனே (சா)

"ஹிந்தி"யாம் பாஷையே யியம்புமோராசையே
இமவரைகுமரியோ டின்னுந்தூரத்தி
லேற்குஞ்சொல்லோசையே (சா)

புந்திமகிழ்ந்திந்தியர் புனிதசுயராஜ்ஜியம்
பொறுமையுடனடையப் போதித்தான்பல
நீதியதேஜெயம் (சா)

நத்தியபரத நாட்டுக் கோர்சரத
சத்திய மெய்விரத ஸ்தாபனஞ்செய்த
சோபனச்சுரத (சா)

நித்தியப்பொருளை நினைப்பந்தாயவனை
நிந்திக்கும்பொய்யிருளை நீக்கும்பாஸ்கரன்
பேர்க்கிய்வனருளை (சா)

நாகபுரிஅசகயோகாச்சிரமம்திலகவித்தியாலயம்

ஸ்ரீசுவாமி பகவானந்தஜி.

54. சித்தமகிழ்ந் தேனையாள் சீதா நாதா என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்தோடி. தாளம்-ஆதி.

பல்லவி.

சாமி பகவானந்தச் சன்யாசியே-குரு (சாமி)

அநுபல்லவி.

பூமியில்பரதமக்கள் புகழும்பிரகாசியே-குரு (சாமி)

சரணங்கள்.

நேமமாய சகயோகாச்சிரம நேத்திரனே
நேர்தில காலய
பேர்நல மோதிய (சாமி)

இந்துமூஸல்மா னைற்றுமையடைய வியம்பியவா
இதந்தரு மாசன
சுதந்தர சாசன (சாமி)

நந்திருநாட்டுகென்மைக்குச் சிறைக்கேகடந்தவனே
நற்றவ மான்மிய
ஒற்றுமை யாமையின் (சாமி)

வந்தேமாதர பாஸ்கரன் பணிமாமந்திரனே
மகரிஷி காந்தியின்
திகழ்பத மேந்திய (சாமி)

கிலாபத்தின் தூதராக இங்கிலாந்து சென்ற

ஸ்ரீமான் பம்பாய்வேலத்சோட்டானி

55. மாலையிலே தென்றல் சோலையிலே என்ற மெட்டு.

இராகம்-தேசிகம். தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

பம்பாய்ப் பதிமேவு சம்பன்ன சோட்டானி
அன்பார் கிலாபத்தனே-தேசநலத்
தென்பார் திடசித்தனே-பரிசுத்தனே (பம்பாய்)

வம்பாய்த்"துருக்கி" நலம்பாதிக் கச்செய்த
*கும்பேனியார் சீமைக்கே-தூதுசென்றார்
நம்பாரத மேன்மைக்கே-நன்னேர்மைக்கே (வம்பா)

மூன்பாய்த் துரியோத னன்பாலே கிக்கண்ணன்
தூன்பானதைப் போலாச்சு-மகமதியர்
பொன்பார்புகழும் போச்சு-புவியிலேச்சு (முன்பாய்)

* கும்பேனியார்-ஆங்கிலேயருடைய ஆதிப்பெயர். இவர் பூர்வீகத்தில் வியாபாரஞ்செய்துகொண்டு நம்மிந்தியாவிற் பிரவேசித்தவர்.

இன்பா"யுத்த"காலத் தின்போ திரைத்ததை
யும்போயறிந்து கொண்டார்-ஆங்கிலரை
நம்பாதபொய்யுங் கண்டார்-உண்மைவிண்டார் (இன்)

"பஞ்சாப்பி"னன்யாய முஞ்சார்க லிபாவும்
நெஞ்சார் பரிகாரமே-கிடைக்கச்செய்வர்
அஞ்சாப் பிரசாரமே- உதாரமே (ப)

மஞ்சாரிங் நாடெங்குஞ் சஞ்சாரச் சன்யாசச்
செஞ்சோதிக் காந்தியடி-பாஸ்கரன் சொல்
விஞ்சைச் சுயாச்சிக்கொடி-புனைந்தான்முடி (தஞ்சா)

இந்தியாவிலிரண்டு திலகங்கள்.

56. கோபுல்சவுக்காருமேபனுமே என்ற மெட்டு.

இராகம்-சகானு. தாளம்-ஆதி.

கண்ணிகள்.

திலகமி ரண்டிருப்ப தாலே-இந்தியா
செல்வம் பெருகுமினி மேலே
உலகஞ் செழிப்பதிவர் பாலே- நமக்
ஊக்கம் பிறந்ததுமிக் காலே (தில)

தொஹைறா.

தென்மொழி வடமொழி சிறந்தவிரு மொழியெனச்
செப்ப நின்றிலகு மாப்போல்
திசையெங்கும் பாஸ்கரன் செய்யசங் கீர்த்தனம்
சென்றுநின் றுலவுமாப்போல்

பல்லவி யெடுப்பு.

வடஇந்தி யாவிற்கொரு திலகம்-நப்சீ
மான்பால தங்காதரத் திலகம்
திடமுள்ள தென்இந்தியத் திலகம்-எங்கள்
சிதம்பரம் பிள்ளையொரு திலகம் (தில)

---

57. பத்திசாதிக்கவிடாது என்ற மெட்டு.

பல்லவி.

சிதம்பரம் பிள்ளையிவர் போல-ஒரு
தேசபக்தனு முண்டோ சீல-குண (சித)

அநுபல்லவி.

இதந்தரவேணுமென்று இந்தியாவில்முயன்று
இரவுபகலுழைத்த எங்கும்பெயர்ப்பிரசித்த (சித)

சரணம்.

வந்தேமா தரமந்த்ர மோதி-பல
வகையிற்பி ரிந்திருக்கும் ஜாதி
இந்தியர் நாமொன்றென்ற நீதி-நமக்
கெடுத்துரைத் திட்டஞாய வாதி

நந்தேயமக்களுக்கே நன்மையுண்டாகுதற்கே
நல்லதவம்புரிந்த நாடெங்கினுந்தெரிந்த (சித)

செய்தபிரசங்கஉ தாரம்-கேட்டுச்
சேயர்க ளுமடைந்தார் வீரம்
மெய்தவ ருதுமனத் தீரம்-கொண்டு
மிகப்புரிந் திட்டாருப காரம்
வையகத்தில்நமக்கே வாழ்வுகொடுப்பதற்கே
வந்திங்கவதரித்த வரதபரமசித்த (சித)

தங்குப்பாஸ் கரத்தமிழ் ஆட்சி-பெறத்
தக்கவழி யிற்பல சூட்சி-ஈதென்
றெங்கட்கெ டுத்துரைத்த மாட்சி-மையை
என்னென்றி சைப்பேனோர்கண் காட்சி
செங்கைவிரலெரியத் தேகத்தில்நீர்சொரிய
சிறைச்சாலையிற்பணித்த செக்குமிழுத்துழைத்த (சித)

ஸ்ரீமதி சரோஜினிதேவி.

58. மனமாயாரே என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்காப்பி. தாளம்-ஆதி.

பல்லவி.

ஸ்ரீமதி சரோஜினி தேவியே-இந்து
தேசாபிமானச் சஞ்சீவியே (ஸ்ரீ)

அநுபல்லவி.

மாமதிமிகுத்த மண்டலமேவிய
மாணிக்கராணி மேதாவியே (ஸ்ரீ)

சரணம்.

பூமகள் திலகம் போலசின் றிலகும்
புண்யகைங்கரியத்தி னுபன்யாசி-நல்ல
கண்யபரதமக்கள் விசுவாசி (ஸ்ரீ)

பெண்களின் கல்வியே-பெருகச்செய் செல்வியே
பேதமையகற்றிடுங் கலைவாணி-என்றும்
போதமளிக்கப்புகழ் ஜெயவேணி (ஸ்ரீ)

சங்கடமறவே-சகலமும்பெறவே
சாதுமஹான்காந்திசொல் தவறாதே-செய்வு
தாரவீரலக்ஷ்மி மாதே (ஸ்ரீ)

சிங்கப்பெண்பணியே-தேசியப்பணியே
செப்பும்பாஸ்கரன் தமிழ் ஜெகஜோதி-பூர்வ
சற்புக்கரசியான ஜோதி (ஸ்ரீ)

தென்தேசராணி

ஸ்ரீமதி சாரளாதேவி.

59, சமக்கத்தக்கன என்ற மெட்டு.

இராகம்-தேசிகசுருட்டி. தாளம்-ஆதி.

பல்லவி.

நமக்குத்தாயெனுஞ் சாரளாதேவி தென்
நாட்டுக்கொரு மஹாராணி-முடி
சூட்டும் பரிமள வேணி (நமக்)

[library stamp]

அநுபல்லவி.

சுமக்குமடிமைத் தனத்தைத் துரத்தி
தூயசகோதரத் தன்மையைப் பரத்தி
சொந்தமிகுந்தசு தந்தரவுணர்ச்சி
தந்தருளுங் கலைவாணி-நம
திந்தியர் நன்மையைப் பேணி (நமக்)

சரணம்.

நல்லசுய ராஜ்ஜியத்தை நாட்டில்நிலை நாட்டிடவே
நாற்றிசையும் ஒத்துழைபா சாத்மீகத்தைக் காட்டிடவே
இல்லமெங்குங்கைத்தறிநெய் தின்பத்துணை கூட்டிடவே
எங்கும்பிரசாரஞ்செய்து இழந்தபொருள்மீட்டிடவே
இப்பரதபுவி யொப்பிடும் பாஸ்கரன்
செப்பும் பிரசங்க ஞானி
தெய்வீகத் தேசாபிமானி (நமக்)

சகோதரி வி. பாலம்மாள்.

60. கிஸ்கேபாலமோரிஜான் என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்தோடி. தாளம்-ஆதி.

பல்லவி.

சகோதரி பாலம்மையே நம்மாதர்
சரியெனப்புகழ் நன்மையே (ச)

அநுபல்லவி.

இகபரசாதனம் பெருகுஞ்சுதேசம்
இயக்கத்தையனுதினம் எடுத்துபதேசம்
பகர்வது பிரகாசம்-கொண்டாடும்
பாரதப்புவி நேசம் (ச)

கற்பின் சந்திரவதி தமயந்தி சீதை
கருதும் நளாயினி சாவித்ரிகாதை
நற்பாஞ்சாலியின் பாதை-கண்ணகி
நடையனுசரிக்குங் கோதை (ச)

அற்புத மகத்துவ மருள்கூடற் பூமி
அமுதமதுரமொழி பாஸ்கர சாமி
செப்பிடுஞ் சுகக்ஷேமி-பாரத
தேவியளித்த வாமி (ச)

பரதமக்கள் சகோதரப்பலம்.

61. தில்பரஙஹி என்ற மெட்டு.

இராகம்-தோடி. தாளம்-ஆதி.

பல்லவி.

ஆதிப்பரத நீதியரசு சோதரப்பலமே-சுய
ஆக்ஷி-மாக்ஷிக் கதுமிகநலமே (ஆ)

அநுபல்லவி.

வீதிகள்தோறும் பிரசங்கம்
செய்துவிடுவது போதாது-அது

வெற்றிபெறும்படி யொற்றுமைச் செய்கை
விளைப்பதுவே தோது-இல்லா

விடில்முடியாது—கார்ய
முடிவடையாது—எண்ணப்

படி நடவாது—இது
வேளை-நாளை-விருப்பந் தப்பாது (ஆ)

சாதிபேதத்தோடு *சம்பத்தின்
பேதந்தனையினித்தான் போக்கி-ஒரு

தாய் வயிற்றில்வந்த சேயரைப்போற்பெருந்
தன்மையை யுண்டாக்கி-மதச்

சண்டைகளை நீக்கி-தேசத்
தொண்டரடி நோக்கி-உண்மை

கண்டுபொய்யைத் தாக்கி-நாமுஞ்
சார்ந்து-சேர்ந்து-தருமமேதாக்கி (ஆ)

ஓதியதேசத்தலைவரெல்லோரும் ஒருங்குடனேகூடி-நல்ல
உத்தமகாந்தியின்சத்தியமொழியை நத்தியின்பந்தேடி-மன

ஊக்கத்துடன் நாடி-தமிழ்ப்
பாஸ்கரன்சொற் பாடி-அருள்

வாக்கியத்தே நீடி-நாம்
ஒன்ருய்-நின்ருல்-ஒப்புவங்கொண்டாடி (ஆ)

---

* சம்பத்தின்பேதம்—பிரபு, ஏழை என்கிற பேதம்.

நாம் செய்யவேண்டிய காரியங்கள்.

62. சோமசேகரனருளும் பாலாவேலா என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்கவாய். தாளம்-ஆதி.

பல்லவி.

மாமுனிவர் சாந்திவேத மந்த்ரம்-மந்த்ரம்-இந்த
மகமதியர் சுகமடையுந் தந்த்ரம்-தந்த்ரம் (மா)

அநுபல்லவி.

நாமினிச் சும்மாவிருத்தல் நன்றோ நன்றோ-நமை
நம்பியாரம்பித்த யுத்தமன்றோ அன்றோ-வீணே
தாமதஞ்செய்தால் முடிவதென்றோ என்றோ-அவர்
சாற்றியது நேற்றோ அல்ல இன்றோ இன்றோ (மா)

சட்டசபைப் பட்டம் விலக்கு.

சட்டசபையலங்கரிக்குந் தன்மை தன்மை-இந்த
ஜனங்களுக்கதிகமென்று நம்மை நம்மை-பல
பட்டந்தந்துகுந்தவைத்தார் பொம்மை பொம்மை-போலப்
பரதமக்கள்செய்துகொண்ட செம்மை செம்மை (மா)

சர்க்கார் கோர்ட்டு, பள்ளிவிலக்கு.

குடித்தனப் பஞ்சாயமன்றம் கூட்டுவீரே-ஆதி
குலநலத் தேசியக்கல்வி யூட்டுவீரே-நம்மைப்
பிடித்தபேயின் கொள்கையாவு மோட்டுவீரே-தேசப்
பெருமைவாழ்க அருமையன்பு காட்டுவீரே (மா)

அயல்நாட்டுச்சரக்கு மதுவிலக்கு.

அன்னிய நாட்டுச்சரக்கை நீக்குவீரே- இழி
வானலாகிரிவஸ்துவைப் போக்குவீரே- இத
நன்னயமகாத்மாத் திட்டம் நோக்குவீரே-சத்யம்
நம்பும்பாஸ்கரன்பதத்தைக்கேட்கும்பேரே (மது)

சிலோன்பத்திராதிபர்யாழ்ப்பாணம்
இராமநாதன் அவர்கள்.

63. கூட்டுறவுபேசி என்ற மெட்டு.

இராகம்-நோட். தாளம்-ஆதி.

இலங்கை ராமநாதன்-நமக்
கிதப்புரிந்திடு நீதன்
துலங்குஞான போதன்-புவி
துதிமலர்ப் பாதன்-பெருந்
தணைநமக்கவனே-ராஜ துரைத்தனத்தர்முனே-பேசித்
துயர்நமக்கெதும் வருமெனிலதைத்
தொலைத் திடுபவனே (இ)

இங்கிலாந்து சென்று-நம்
இந்தியாவில் நன்று
தங்குபார்ல்ய மென்று-பேசி
சமர்ப்பித்தா னன்று-வெகு
தைரியசாலி கன தனபரிபாலி-பிறர்
தமக்கரும்பெரும் நலம்புரிதலே
தனக்கொரு ஜோலி (இ)

இந்துதேச பத்தன்-உல
கெங்கிலும் பிரசித்தன்
சிந்தையிற் பரிசுத்தன்-ஒரு
*சிவதல முத்தன்-நனி
தேர்கலைக்கொருவன்-இனி ஜெயந்தனைப்பெறுவன்-மொழி
தேனினித்திடும் பாஸ்கரன் தமிழ்ச்
சேகரத் திருவன் (இ)

---

6௧. வேணும்வேணும் திருவருள்புரி என்ற மெட்டு.

இராகம்-தேசிகபியாக். தாளம்-ஆதி.

பல்லவி.

ஆதிவேத மனுமுறைப்படி அறமதுபுரி
யாழ்ப்பாணத்தவனே- †தமிழக
ராதிம கத்தவனே-இராமநாத
ஞமோ ருத்தமனே (ஆதி)

அநுபல்லவி.

நீதி விதிவழி பிசகிய தென்று
நேரி லாங்கில பார்லிய மென்று
நின்றெதிர்வாதம் - நீள்பிரமாதம்
நன்றுசெய்தான் ஜீவகாருண் யஞ்சிலோனில்
நாட்டி நாட்டி நாட்டி (ஆதி)

சரணம்.

சிங்களச்சண்டையில் தெருவெலாம்ஜனமே
திரண்டன உருண்டன பிணமே

---

* இலங்கையில் இவர் ஒரு சிவதலங் கட்டியுளார்.
† இவரோர் தமிழ்ப்பெயரகராதியாசிரியர்.

சென்றனன்நாடி நின்றனன்கூடி
செட்பிசமாதானம் செய்தான்பாஸ்கரன்
சீரே சீரே சீரே (ஆதி.

பரோடா மகாராஜா
ஸ்ரீகயக்வார் அவர்கள்.

65. தரிகாரிலேலோ என்ற மெட்டு.

இராகம்-அநுமதோடி. தாளம்-ஆதி.

பல்லவி.

இப்-பாரிலிவனொரு போஜன்-எங்கள்
பரோடா மகராஜன் 'கயக்வார்' (பா)

அநுபல்லவி.

தேரியபொங்கத் திடபிரசங்கத்
தினகரனதிசவு தாரன்-நனி
ஜெயமுறவே மெதும் பயமறவே நலம்
திருவுளப்படி புரி தீரன் (இப்)

சரணம்.

பொதுநலகுணவான் புண்ணிய சனவான்
பொறுமையில் அருமையில் தக்கோன்-பலர்
போற்றபி மானிநேர் புனிதமெய்ஞ் ஞானிசீர்
பொருந்து சுயாட்சியில் மிக்கோன் (இப்)

தேசியப் படிப்பு சிறுவர்கள் பயிற்பு
தேரொரு பாடக சாலை-இந்தச்
செகம்புக ழத்தக விதம்நிறுவித் திகம்
செய்தா ன்றம்பல காலை (இப்)

பாஸ்கரசாமி பாடியநேமி
பரம்பரை யாகவி சித்ரன்-நற்
பதிகதி நிதிதரும் மதிபதி விதமுறும்
பாரிய பாரத புத்ரன் (இப்)

இந்தியாவில்
இரண்டு கவிச்சக்கரவர்த்திகள்.

66. தாயாகவந்தஉன்னை என்ற மெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி. தாளம்-ஆதி.

கண்ணிகள்.

இந்தியாவி லிரண்டு எங்கும் புகழ்திரண்டு
இசைகவிச் சக்ரவர்த்திகள்-சுறைகள்நமக்
கெல்லாமினி நிவர்த்திகள்-ஏதும்
ஈடில்லாதவி சேடத்தோடவர்
பாடுங்கவிகளி லாடத்தேவர்கள்
என்னபரமா னந்தமே-பாரதநாடு
இன்றேநமக்குச் சொந்தமே (இந்)

நந்தேயம் நல்லறில்லை நாடத்ரமை யொன்றில்லை
நம்பிக்கை யுண்டு ஞாயமே-சத்யாக்கிரக
நாமமெய்ச்சம்ப்ர தாயமே-புவி

நாட்டா னின்றனர் பாட்டால் வென்றனர்
கூட்டாநங்குறை மீட்டாவின்றனர்
நாகரீகஞ் சிறந்தவர்-பாரதமக்கள்
நன்மைக்கென்றே பிறந்தவர் (இங்)

தேசஉணர்ச்சிவந்து செய்வதையும்மறந்து
ஜெய ஜெய வந்தேமாதரம்-மகாத்மாகாந்தி
தெரிசனமே நம்மாதரம்-நலஞ்
சித்திக்கும்மென ஒத்துப்பாடிட
எத்திக்கும்மொரு மித்துக்கூடிட
செப்புங்கவிப் பிரபந்தமே-செவிநுழைந்தால்
சித்தவலி யனந்தமே (இங்)

கற்றோர்களே நிறைந்த கல்கத்தாவிற் பிறந்த
கனம்'ஸர்'ரவீந்த்ர நாத்தாகூர்-வடஇந்தியாக்
கவிச்சக்ரவர்த்தி யாமீகூர்-இனி
கற்கண்டேமிகர் சொற்பண்டேபெறு
மற்கொண்டோரும்பிர் மிக்கப்பாடொரு
கல்விப்பிரகாசச் சங்கீதன்-நமக்கவனே
கடாட்சப்ரமாத இங்கிதன் (இங்)

காருண்யவான்சுதேசி கற்பதரு விஸ்வாசி
கனம்சுப்ர மண்யபாரதி-ஒருதென்இந்தியா
கவிச்சக்ர வர்த்தியாரதி-துதி
சற்பணியாத்தமி ழுற்பவசாகர
சொற்பெறுபாஸ்கர ஜற்புதசேகர
காந்திமகாத்மா சீடனே-தேசியபக்தி
கண்டகவிவி சேடனே (இங்)



தமிழ் க்ஷேத்திர மதுர பாஸ்கரதாஸ்.

உலகபிரசித்திபெற்ற

பிரசங்க சண்டமாருத

கனம் சத்தியமூர்த்தி ஐயர்.

67. ஆஹாஎக்யாஹ-ுவா என்ற மெட்டு.

இராகம்-மால்கோஷ். தாளம்-ஆதி.

பல்லவி.

சாமி சத்யமூர்த்தி
சந்ததமும் இந்தியாவைச் சார்ந்தசீர்த்தி (சா)

அநுபல்லவி.

பூமி புண்யகீர்த்தி
போந்தமுனி காந்தியடி போற்றும்பூர்த்தி (சா)

சரணம்.

சத்தியாக்ர கவிரத சாரமெடுத் தூட்டுவான்
சாந்திபெறுதத்துவத்தின் சாட்சியத்தைக்காட்டுவான்
உத்தியிற் பாரதமக்க ளூர்றதுயர் ஓட்டுவான்
ஒய்விலா திரவுபக லோடிச்சங்கங் கூட்டுவான்
ஒத்துமைபா மையேமெத்த
உண்மையென் றுணரவைத்த
பத்திமானெங் கும்ப்ரசித்த
பாஸ்கரந்த மிழையொத்த (சாமி)

காப்பி, தேயிலை, கரும்பு, ரப்பர், மின்ரும்

தோட்டக் கஷ்டப் பாட்டு.

ஆனந்தக்களிப்பு.

68. இறக்கத்துணிந்துகொண்டேனே என்ற மெட்டு.

இராகம்-நாதநாமகிரியை. தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

தோட்டத்தி லிந்தியர்பாடு-சொல்லத்
துக்கமும் வெட்கமு மிக்கதோர் கேடு (தோ)

கூட்டத்தின் பாரத நாடு-பாதி
குறைந்தது வெள்ளைக் கங்காணிகளீடு
காட்டப் பணத் தாசையோடு-சென்று
கண்ணீர்வடித்துக் கதறுதக்காடு (தோ)

கல்லும் நெல்லும் சேர்ந்தகஞ்சி-அதைக்
காய்ச்சிக்குடிக்குமுன் கண்டிப்பார்மிஞ்சி
சொல்லவுங்கூலிகள் அஞ்சி-தங்கள்
சொற்பனத்திலும் நடுங்குறூர் கெஞ்சி (தோ)

நல்ல துணி மணி யேது-தேக
நன்மைக்காகக் குளிக்கமுடியாது
இல்லற தர்மம் செய்யாது-ஆண்பெண்
இருவரும் நோய்க்கிட மீய்வர் தப்பாது (தோ)

பெண் ணென்றுமா ணென்று மில்லை-மக்கள்
பிறப்பின்றி யிறப்பதே குறிப்பிடுந் தொல்லை
கண்ணென்ற தீசனுக்கில்லை-அவர்
கதறு முறைகேட்டு காப்பதோரெல்லை (தோ)

திண்ணமுடனிதை யின்றே-ஒரு
தீர்மானஞ்செய்து சுதேசிகளென்றே
எண்ணத்துடன்முன்னால் நின்றே-தமிழ்
இபம்பும்பாஸ்கரன்சொற்செயம்பெறல்நன்றே (தோ)

தமிழ்நாட்டுக் கும்மி.

69. இராகம்-சுருட்டி. தாளம்-ஏகம்.

வந்தே மாதரம் வளர்நாடு-பொன்னி
வாசமிகுந்த தமிழ்நாடு
சந்தேகமில்லாது இந்துமுஸல்மான்
சகோதரத்தன்மை பெறுநாடு

இந்தியமன்னர் முடிநாடு-கற்பின்
ஏந்திழைமார்க ளுறைநாடு
முந்திய கல்விக் குருநாடு-தவ
முத்தருஞ் சித்தரும் வாழ்நாடு (இ)

ஜீவகாருண்யத் திருநாடு-பலர்
சேமத்தின் கற்ப தருநாடு
மூவர்களன்பு முதிர்நாடு-சதுர்
முச்சங்கம்நின்ற முகில்நாடு (ஜீ)

பாவங்கள்நீக்கும் பதிநாடு-வித்வ
பாஸ்கரன்போற்றும் நிதிநாடு
மேவுமுப்போகம் பொழிநாடு-இன்னும்
வேண்டுவதோங்கி விளைநாடு (பா)

மதுரைத்தமிழ்ச்சங்க ஸ்தாபகர்
பாலவநத்தம் ஜமீந்தார்

ஸ்ரீமாந். பி. பாண்டித்துரைச்சாமித் தேவரவர்கள்.

பாலபிஷேகப் பழநிமலை என்ற மெட்டு.

தேசிகபியாக்.] கண்ணிகள். [சாப்பு.

பாலவநத்த ஜமீந்தா ரெனும் மெங்கள்
பாண்டித்துரை யொரு பாவலனே
பண்டுள முச்சங்கப் பாங்கே தமிழ்ச்சங்கம்
பாரில் நிறுவிய காவலனே
மேலும் புலவர்கள் மெச்சும் ப்ரசங்கன்
மிகுந்தநூ லாராய்ச்சி மிக்குடையான்
மேனடெ லாம்புகழ் வேண்டுவன பெற்ற
மேதகையான் கற்பகக் கொடையான் (பா)

தொகையறா.

*வேதநூலகத்தியத்தை விளங்குதொல்காப்பியத்தை
ஆதியாமிலக்கியத்தை அருப்பிறவிலக்கணத்தை

முடுகு சந்தம்.

விதவிதம் பதிப்பித்து வெளியிடத்தனமே
விகசிதமுடனளித் ததவினன் முனமே

பல்லவி யெடுப்பு.

விற்பன பாஸ்கர மாதாந்தச் செந்தமிழ்
வித்வக லாசாலை வாழியவே (பா)

* சங்கநூல்களில் இடையிடையே வரும் அகத்திய சூத்திரத்தை

பதிப்பாசிரியர் வாழ்த்து.

சர்வலோக சாட்சியே என்ற மெட்டு.

இராகம்-நோட். தாளம்-ஆதி.

கோபால கிருஷ்ணக்கோன் கோடீஸ்பரன்மிக்கோன்
கூடலம் பதிவளர் கோகுலத் தொரு தக்கோன்
கொற்றநற்குணன் - கற்றவிற்பனன்-பேர்பெறு
குவலயமே புகழுடையான் நவநிதிநேர் தருகொடையான்
கொண்டல்வண்ணன்பக்தனே எண்டிசைப்ரசித்தனே
கோரும்பாஸ் கர ஜெய (கோ)

மாதுபாகமானவா என்ற மெட்டு.

இராகம்-நோட்] கண்ணிகள். தாளம்-ரூபகம்.

சீலராமசாமிக்கோன் சீர்மிக்கோன் நேர்மிக்க
சேமமே நிலைபெறும் சீவகாருண்யமிக்கோன்
தேனுர்-சந்தமே-சிந்திய-செந்தமிழ்மிக்கோன்
திசைமுழுதும் இசைபரவும்
திருவுடையான் ஒருகொடையான்
தீனதயாபரன் தேசிய பாஸ்கரன்
செப்புபா ஒப்பிய (சீல)

மங்கள வாழ்த்து.

72. தென்கூடலம்பதிவாழ் என்ற மெட்டு.

கண்ணிகள்.

நித்யம் ஜெய மங்களமே
நீடிக்கு மெங்கினுமே
சுத்தப்பர தத்தலமே
சுயராஜ்யப் பலமே
நேசநிதானிக்கும் தேசாபிமானிக்கும்
நேமிக்குப்பாஸ்கர சாமிக்கும் பூமிக்கும்
நீதி-காண-ஜோதி-பூண
நிதிபலவும் நதியுதவும்
மதியுடையோர்க் சதிதுதியே (நித்)

நாடெங்கு மிக்கீதம் பாடிக்கேட் போய்நீதம்
நன்றாக-ஒன்றாக- நின்றோங்கும் போதம்
நாமந்து லங்குஞ்சீமான்கோபாலகிருஷ்ணன்
நயமுறவே-பயமறவே
ஜெயம் பெறவே-சுயவரசியல். (நித்)

2888

இரண்டாம்பாகம் முற்றிற்று

வந்துவிட்டது! உ வந்துவிட்டது!!

தமிழ் நாடெங்கும் புகழ்பெற்றுள்ள, கன்னிச்சமீன் சரபம்,

உடுமலை முத்துசாமிக் கவிராயரவர்களியற்றிய

இராமாயண நவீன நாடகம்.

ஏழுகாண்டங்களும் சம்பூர்ணமாக அடங்கப்பெற்றுள்ளது.

முந்துங்கள்! புத்தகத்திற்கு முந்துங்கள்!!

இகபர சாதனங்களுக்கு இன்றியமையாததும், இஷ்டகாமியார்த்த சித்திபெறச் செய்வதும், ஆகிய இராமாயணகாவியத்தை முற்காலத்திக் கவிவல்லோர்கள் பலவித காவியங்களாகச்செய்து, உலகத்தை இன்புறச்செய்திருக்கிறார்கள் எனினும், அவை "தற்காலநாகரிகத்திற்கு அநுகூலமானவையல்ல" என்பது நன்கறிந்த நண்பர் பலரும் விரும்பியவண்ணம் பற்பல அற்புத வர்ணமெட்டுகளாலியற்றப்பெற்ற பாடல்களாலும், படிப்பவர்களுக்குப் பிரத்தியக்ஷமாக நடைபெறுவதுபோலத் தோற்றும் நாவல்கள் போன்ற சிறந்த செந்தமிழ் வசனங்களாலும் இயற்றப்பெற்று உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டு, ஆப்டோன் என்ற சித்திரப்படங்களால் அலங்கரித்துச் சொற்பக்காப்பிகளே தயாரித்திருக்கிறோம்.

இதில் அமைந்துள்ள வர்ணமெட்டுகளின் இனிமையும், பாடலின் பெருமையும், வசனசாதுர்யங்களின் அருமையும் நவரசபூர்த்தியாகவேயிருக்கும். விலை ரூ. 2.

சிறந்த செந்தமிழ் நாவல்கள்.

அன்பின் களஞ்சியம் 1-ம் பாகம்	1	8	0
டிட்டோ 2-ம் பாகம்	1	8	0
டிட்டோ 3-ம் பாகம்	1	8	0
ஜெயசீலன் (அல்லது) அடாதுசெய்பவர் படாதுபடுவர்	1	0	0
ஆனந்த மனோகரன் (அல்லது) முயற்சி திருவினையாக்கும்	1	0	0
அமிர்தசாகரன் (அல்லது) கோடீசுரனுடைய குமாரன்	1	0	0
மதனகாமி	1	0	0
கோமதி கோகிலமானது	0	12	0
பொற்றொடி	0	14	0

மகா-ள-ள-ஸ்ரீ உடையார்பிள்ளையவர்களியற்றிய,

கோவலன் சரித்திரம் 1, 2 பாகங்கள்	0	4	0
அல்லியரசாணி சரித்திரம் 1, 2 பாகங்கள்	0	4	0

முந்துங்கள்! முந்துங்கள்!

வாங்குவதற்கு முந்துங்கள்!

மதுரைத்தமிழ் வித்வான்,

ஸ்ரீ நா. கிருஷ்ணசாமிநாயுடவர்கள்

எழுதிய

சாவித்ரி சத்யவான்

ஓர் இனிய தமிழ் நாடகம்.

பதிவிரதா சிரோமணிகளான பஞ்ச கன்னிகைகளில் ஒருவராய், தான் அடையப்போகிறநாதன் "அற்பாயுள் உள்ளவன்" என்று முன்னரே தெரிந்தும் அவனையே மணந்து, அவன் ஆயுள் முடிவில் அங்கவனுயிரைக் கவர்ந்துசெல்லவந்த யமனைக் கண்டு, பின்தொடர்ந்து, பல வரங்களைப்பெற்று, ஈற்றில் தன் நாயகன் உயிரையும் மீட்டிக்கொணர்ந்த எல்லாம்வல்ல சாவித்திரி தேவியாரின் சரித்திரத்தை நற்றமிழ் நாட்டுமக்க ளெல்லோரும் பெரும்பாலும் பெண்பாலரும் பக்திசிரத்தையோடு உணர்ந்திருப்பது மிக்கநலமெனக்கருதி, பாரதமுதலிய பெருங்காப்பியங்களின் முறையை அநுசரித்து 'இயல் இசை நாடகம்' என்னும் முத்தமிழமைதியாச் சொற்சுவை பொருட் சுவையுடன் தற்கால நாகரீக வர்ணமெட்டுக்களானும், நாவல் நடையானும் பண்டிதரேயன்றி ஏனையரும், பள்ளிக்கூடமாணவர், மாணவச்சிறுமிகள், பெண்பாலரும் எளிதிலுணருமாறு தெள்ளிய நடையில் எழுதப்பெற்றிருக்கிறது.

இதுபடிப்பவர்க்கும், கேட்பவர்க்கும் மிகுந்த உற்சாகத்தையும், ஆனந்தத்தையும் விளைவித்துப் பன்முறை படித்தாலும், கேட்டாலும் தெவிட்டாதென்பது இப்புத்தகத்தை வாங்கிப் படிப்பவர்க்கே நன்கு விளங்கும். பாடலிற் சிறந்த நாடகாபிமானிகளுக்கும் இது பயன்தரத்தக்கது. இதன் விலை அணா 0—8—0.

மகாத்மா காந்தி தியானமும் அவரது சரித்திரமும்

சிறந்த சிங்காரப் பாட்டுகளிலமைத்தது. விலை அணா 1.

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,

புக்ஷாப், புதுமண்டபம்,

மதுரை.